மட்/ ககு/ பேத்தாழை விபுலானந்தா கல்லூரி
பல்தேர்வு வினாக்களின் தொகுப்புக்கள்
க.பொ.த. (உயர்தரம்) – 2020

அத்தியாயம் ஒன்று (அளவையியல் அறிமுகம்)

மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

01. அளவையியல் என்பது

1. மொழி வாக்கியங்களின் கவர்பாடு பற்றி ஆராய்வது
2. சிந்தனை மொழி பற்றிய பகுப்பாய்வு
3. வாதங்களின் கருத்து, வாய்ப்பு பற்றி ஆராய்வது
4. விதிகளை பயன்படுத்தி சிந்தனைகளை உருவாக்குவது
5. நியமரீதியாக முடிவுகளை பெறுவது

02. வாதம் என்பதன் மிகச் சரியான விளக்கம்

1. நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கமைய முடிவைப் பெறுவது
2. தரவெடுகூற்றுக்கள் தமக்கிடையே தொடர்புபடுவது
3. தரவும் முடிவும் கொண்டது
4. அனுபவ எடுப்புக்களாலானது
5. அனுபவ நேர்களுடன் பொருந்தி அமைவது

03. அளவையியலின் நடைமுறைப்பயன்பாடாக அமையாத ஒன்று

1. சீரான சிந்தனைக்கு வழியமைக்கின்றது
2. வாதங்களின் வாய்ப்பினைத் தீர்மானிக்கின்றது.
3. வாதங்களுக்கு வடிவ இயல்பை வழங்கி தவறுகளை இனங்காண உதவுகின்றது.
4. ஏனைய துறைகளில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை நிவர்த்தி செய்கின்றது
5. புதிய அறிவியல் வளர்ச்சிக்கு உதவுகின்றது.

04. அளவையியலுக்கும் கணணிக்கும் இடையிலான மிக நெருங்கிய தொடர்பாகக் கருதக் கூடியது.

1. மொழி பற்றிய பகுப்பாய்வு
2. தர்க்க இயக்கிகளின் செயற்பாடு
3. கிரேக்க நாட்டில் தோற்றம் பெற்றது
4. இரண்டும் நவீன தொழில்நுட்ப துறைகள்
5. அறிவையும், புலக்காட்சியையம் பயன்படுத்தும்

05. பாரம்பரிய மேற்கத்தேய அளவையியலின் தந்தையாக அமைபவர்

1. அரிஸ்ரோட்டில் 2. கலிலியோ 3. பிரான்சிஸ் பேக்கன்
4. சோக்கிரட்டிஸ் 5. காள்பொப்பர்

06. ‘‘பிரின்சிப்பியா மெத்தமெட்டிக்கா’’ எனும் நூலை பேட்டன் ரசலுடன் சேர்ந்து எழுதியவர்

1. கலிலியோ 2. ஆக்கிமிடிஸ் 3. பிளேட்டோ
4. லைபினிட்ஸ் 5. வைட்ஹெட்

07. அர்த்த ரீதியாக சமமில்லாத கூற்று எது.

1. தங்கம் பளபளக்கும் 2. பளபளக்குமாயின் தங்கமாகும்.
3. தங்கம் மட்டுமே பளபளக்கும் 4. தங்கம் என்றால் பளபளக்கும்
5. ஒவ்வொரு தங்கமும் பளபளக்கும்

www.kedu.lk

08. அனுமானத்தில் நியாயம் என ஒன்றுள்ளது என்பதை முதலில் கண்டறிந்தவர்

1. பேட்டன் ரசல் 2. அரிஸ்ரோட்டில் 3. பிளேட்டோ
4. பிரான்சிஸ் பேக்கன் 5. வென்

09. ''இன்று மட்டக்களப்பில் மின்வெட்டு இருக்கும் அல்லது மின்வெட்டு இருக்காது'' என்ற வாக்கியம்

1. பொய்யானது
2. அனுபவ ரீதியான உண்மை
3. தர்க்க ரீதியான உண்மை
4. நிகழ்தகவு உண்மை
5. இன்றியமையாத பொய்

10. அளவையியலுக்குரிய நவீன வரைவிலக்கணத்தை உள்ளடக்கியிருக்கும் பிரதான எண்ணக்கருக்கள்

1. வாதம், வாய்ப்பு
2. வாதம், வாய்ப்பு, கூற்று
3. நியமம், வாய்ப்பு
4. கூற்று, வாதம், வாய்ப்பு
5. வாதம், நியமம், வாய்ப்பு

www.lkedu.lk